**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC- 146/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | முத்து | Prosecution | LW–1 as PW –1 |
| Fathers Name | சாமிதுரை | Defence | |
| Village | சின்னகுத்தவக்கரை, கொள்ளிடம் | Taluk | |
| Calling | | Age | 50 /2025 |

**Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

19.06.2025. **எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது வயலுக்கு பக்கத்து வயலை வைத்துள்ளார். எனது வயலுக்கு போர்செட் கிடையாது. ஆனால் எதிரியின் வயலுக்கு உண்டு. ஆகவே நான் அவருடைய போர்செட் மூலமாக எனது வயலுக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொள்ள அவரிடம் கேட்டு, அவர் அதற்கு ஒப்புக் கொண்டு நான் அவரிடம் ரூ.3000/– பணம் சண்டை நடைபெறுவதற்கு ஒரு வாரம் முன்பு கொடுத்தேன். அந்த சமயத்தில் அவருடைய மோட்டார் காயில் தீய்ந்து போய் இருந்ததால், அதை சரி செய்வதற்கு நான் அந்த பணத்தை கொடுத்தேன். அவரும் என் வயலுக்கு நீர் பாய்ச்ச மேற்படி மோட்டாரை பயன்படுத்திக் கொள்ள என்னை அனுமதிக்கிறேன் என்று கூறினார்.

2.அதன்படி கடந்த 19.06.2022ம் ஆண்டு மதியம் 3.00 மணியளவில், நான் என் வயலுக்கு சென்றபோது எதிரி அவருடைய வயலில் மோட்டார் கொட்டகையில் பைப்பை சுத்தியளால் தட்டிக் கொண்டுஅமர்ந்திருந்தார். அந்த சமயத்தில் அவர் குடி போதையில் இருந்தார். நான் அப்போது அவரிடம் எனது வயலுக்கு தண்ணீர் கொடுங்கள் என்று கேட்டேன். என்னோடு எனது மனைவி தேவியும் எனது மகள் கீர்த்தனாவும் உடன் வந்திருந்தார்கள். நாங்கள் தண்ணீர் தரச் சொல்லி அவரிடம் கேட்க, 'நீ காசு கொடுத்தா, நான்

தண்ணி கொடுக்கணுமா? குச்சிகாரி மகனே, தேவடியா மகனே' என்றெல்லாம் என்னை தகாத வார்த்தைகளால் திட்டி, தான் கையில் வைத்திருந்த இரும்பு சுத்தியல் கொண்டு எனது முன்பக்க தலையின் வலது புறத்தில் ஓங்கி அடித்துவிட்டார். நான் ரத்தம் வந்து அலறினேன்.

3. எனக்கு காயம்பட்ட உடன் எனது மனைவி மகள் மற்றும் எனது மைத்துனர் காளிதாஸ் ஆகியோர் என்னை அழைத்துக் கொண்டு சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். நான் மருத்துவமனையில் இருந்த போது கொள்ளிடம் போலீசார் என்னை வந்து விசாரித்தனர். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்கு மூலத்தில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான். நான் சொல்ல சொல்ல போலீசார் அதனை எழுதிக் கொண்டனர். (அந்தப் புகார் வாக்குமூலம் அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பிடடல் குறுக்கு வசிாரணை**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவது எந்த இடம் என்றால் எதிரி வயலில் அமைந்துள்ள மோட்டார் கொட்டகை ஆகும். அது கூரையால் எழுதப்பட்டிருந்த கொட்டகையா என்றால் இல்லை கான்கிரீட் ஷெட் ஆகும். அந்த மோட்டார் கொட்டகை யாருடையது என்றால் மணி என்பவருடையது ஆகும். அந்த மணியின் நிலத்தை தான் எதிரி குத்தகைக்கு ஓட்டி அந்த மோட்டார் ஷெட்டையும் எதிரி குத்தகைக்கு பயன்படுத்தி வந்தார். தற்போது அந்த மோட்டார் கோட்டகையை யார் குத்தகைக்கு வைத்துள்ளார்கள் என்றால் நாங்கள் தான் வைத்துள்ளோம். கடந்த ஒரு வருடமாக நாங்கள் வைத்துள்ளோம்.

2. பழுதடைந்த மோட்டாரை நானும் எதிரையும் தான் கடைக்கு எடுத்துச் சென்றோம் என்றால் சரிதான். அந்த மோட்டாரின் காயிலை மாற்றி கொடுத்தது எதிரி என்றால் சரிதான். நான் மேற்படி மோட்டார் சரி செய்வதற்கு ரூ.3000/- தருவதாக ஒப்புக்கொண்டு முதலில் வெறும் ரூ.1000,/- மட்டுமே கொடுத்தேன் என்றால் சரிதான். ஆனால் அதற்கு மறுநாள் முழு தொகையையும் மோட்டார் ரிப்பேர் செய்த அன்று நான் எதிரிக்கு ரூபாய் 2,000/- கொடுத்தேன்.

3. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை சுற்றி வேறு வீடுகள் அல்லது குடியிருப்புகள் கிடையாது என்றால் சரிதான். ஆள் நடமாட்டமும் இருக்காது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் என் மனைவி மற்றும் மகள் ஆகியோர் இருந்தனர். எனது மைத்துனர் எதிர்த்த வயலில் மருந்து அடித்துக் கொண்டிருந்தார். போலீசார் என்னை விசாரித்தபோது எனது மனைவி மற்றும் மகள் ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஏனெனில் என் மகள் படித்துக் கொண்டிருக்கும் பெண் என்பதால் நான் சொல்லவில்லை. சம்பவம் நடந்தபோது எதிரி போதையில் இருந்ததாக நான் போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன்.

4. நான் எந்த வகுப்பை சேர்ந்தவர் என்றால் படையாட்சி ஆகும். நான் குத்தகைக்கு எடுத்து பயிர் செய்யும் நிலத்து உரிமையாளர் என்ன வகுப்பு என்றால் அவரும் படையாட்சி தான். எதிரி தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர் என்றால் சரிதான். மேற்படி வயலில் எதிரி எத்தனை வருடமாக குத்தகைக்கு எடுத்து பயிர் செய்தார் என்றால் எனக்குத் தெரிந்து ஒரு வருடம் மட்டும் செய்தார். வாக்குமூலம் பெற்றபோது மட்டும்தான் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் அதற்குப் பிறகு ஒரு முறை போலீசார் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து வரைபடம் வரைந்து பார்வையிட்டபோது விசாரித்தார்கள். அந்த சமயத்தில் சம்பவ இடத்தில் வைத்து வேறு யாரை விசாரித்தார்கள் என்றால் என்னையும் சக்திவேல் மற்றும் விஜயகாந்த் ஆகியோரை விசாரித்தார்கள். போலீசார் சம்பவ இடத்தை எப்போது பார்வையிட்டார்கள் என்றால் சம்பவம் நடந்து சுமார் ஆறு மாத காலம் கழித்து பார்வையிட்டார்கள். நான் சொல்வது போன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி தாழ்த்தப்பட்டவர் என்பதற்காக அவர் பயிர் செய்து வந்த குத்தகை நிலத்தை கைப்பற்ற வேண்டும் என்கிற கெட்ட நோக்கத்தோடு நான் கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள தேவி, காளிதாஸ் மற்றும் இளம் பரிதி ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC- 146/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | காளிதாஸ் | Prosecution | LW-3 as PW -2 |
| Fathers Name | தங்கப்பன் | Defence | |
| Village | சின்னகுத்தவக்கரை, கொள்ளிடம் | Taluk | |
| Calling | | Age | 40 /2025 |

**Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

19.06.2025. **எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மாமா ஆவார். என் வயலுக்கு எதிரில் உள்ள வயலில்,அ.சா.1 போக்கியத்திற்கு விவசாயம் செய்து வருகிறார். கடந்த 19.06.2022ம் தேதியன்று மாலை சுமார் 3.00 மணியளவில் நான் எனது வயலில் மருந்து அடித்துக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் 'ஐயோ! அம்மா' என்று கீர்த்தனா அலரும் சத்தம் கேட்டது. நான் அருகே சென்று பார்த்தபோது, அ.சா.1 தலையில் ரத்தம் வடிய நின்று கொண்டிருந்தார். எதிரி பன்னீர் அங்கு சுத்தியலை கையில் வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார். பன்னீர் முழு போதையில் அன்று இருந்தார். அ.சா.1 க்கு நிறைய ரத்தப்போக்கு இருந்ததால் அவரது தலையில் ஒரு துண்டை வைத்து அழுத்திப் பிடித்துக் கொண்டு, நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் அவரை உட்கார வைத்து சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன். போலீசார் அந்த மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் பிளம்பிங் மற்றும் எலக்ட்ரீசியன் வேலை செய்கிறேன். போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சீர்காழி மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். எப்போது விசாரித்தார்கள் என்றால் 19.04.2022 மாலை 4.30 மணி அளவில் விசாரித்தார்கள். சம்பவம் தொடர்பாக போன் மூலமாக தான் எனக்கு தகவல் தெரிந்தது என்று போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் அந்த சம்பவம் நடந்த போது எதிர் வயலில் பூச்சி மருந்து அடித்துக் கொண்டிருந்தேன். அந்த வயலில் என்னோடு வேறு யார் வேலை செய்தார்கள் என்றால் நான் மட்டும்தான் செய்தேன். சம்பவ இடத்திலிருந்து வயல் எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் ஒரு கன்னி வாய்க்கால் தாண்டி இருக்கும்.

2. நான் சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் ஆமாம். அந்த இடத்தில் அ.சா.1 அவர் மனைவி மற்றும் மகள் ஆகிய மூவரும் தான் இருந்தோமா என்றால் ஆமாம். எதிரியும் இருந்தார். எதிரியை நான் ஓடிச்சென்று பிடித்தேனா என்றால் பிடிக்கவில்லை. சம்பவ இடத்தில் இருந்து தார் சாலை எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் 200 மீட்டர் தூரத்தில் இருக்கும். அ.சா.1ஐ எத்தனை மணிக்கு மருத்துவமனையில் சேர்த்தேன் என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. சம்பவம் எப்போது நடந்தது என்றால் 3.00 மணிக்கு நடந்தது. ரத்தக்கறை படிந்த துண்டு உள்ளிட்ட தடய பொருட்களை போலீசார் என்னிடமிருந்து கைப்பற்றினார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடத்தை தற்போது அ.சா.1 போக்கியத்திற்கு வாங்கி சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரிதான். மோட்டார் செட் யாருடையது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் போலீசாரிடம் அந்த செட் எதிரிக்கு சொந்தமானது என்று சொன்னேன் என்றால் சொல்லவில்லை. எனக்கு இந்த வழக்கு சம்பவத்தைப் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் புகார் தாரர் எனது உறவினர் என்பதால் அவர் ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC- 146/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | தேவி | Prosecution | LW-4 as PW -3 |
| Father Name | முத்து | Defence | |
| Village | சின்னகுத்தவக்கரை, கொள்ளிடம் | Taluk | |
| Calling | | Age | 44 /2025 |

**Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

19.06.2025. **எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார்.அ.சா.2 எனது சகோதரர். கடந்த **19.06.2022**ம் தேதி மதியம் **3.00** மணியளவில், நான் என் கணவர் மற்றும் எனது மூத்த மகள் ஆகிய மூவரும் எங்கள் வயலுக்கு மருந்து அடிப்பதற்காக சென்றோம். எதிரி பன்னீர் எங்கள் வயலுக்கு தண்ணீர் விட அனுமதித்தால் மருந்து அடித்து விடலாம் என்று தீர்மானித்து மூவரும் சென்றோம்.

2. அப்போது பன்னீர் அவருடைய வயலில் இருந்தார். என் கணவர் அவரிடம் எங்கள் வயலுக்கு தண்ணீர் திறந்து விடுமாறு கேட்டார். அதற்கு பன்னீர் அவரைப் பார்த்து 'ஏண்டா குச்சிகாரி மகனே, காலையிலிருந்து என்ன பண்ண? தண்ணி தொறந்து விட முடியாது' என்று அவரை தகாத வார்த்தைகளால் திட்டி, கீழே கிடந்த சுத்தியலை எடுத்து எனது கணவரின் தலையில் ஓங்கி அடித்துவிட்டார். என் கணவருக்கு அதனால் மண்டை உடைந்து ரத்தம் நிறைய வழிந்து ஓடியது. உடனே எனது சகோதரர் அ.சா.2 அவரது வண்டியில் வைத்து என் கணவரை ஏற்றுக்கொண்டு சீர்காழி அரசு மருத்துவமனைக்கு வந்து சேர்த்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்றே என் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். என்னைத் தவிர வேறு யாரையும் விசாரித்தார்கள் என்றால் எங்கள் தெருவை சேர்ந்த நபர்கள் 10 பேரை விசாரித்தார்கள். அவர்களிடம் கையொப்பம் வாங்கிக் கொண்டார்களா என்றால் வாங்கிக் கொண்டார்கள். அந்த பத்து நபர்களும் ஒரே தாளில் கையொப்பம் செய்து கொடுத்தார்களா என்றால் ஆமாம். என்னை அதற்குப் பிறகு போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியும் என்று நான் போலீசார் விசாரித்த போது சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு பற்றி தெரியாது என்றாலும் என் கணவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.